8th November 1965]

திரு. வி. எஸ். எஸ். மணி : இந்த மாநிலத்தில் எந்தெந்த ஊர்களில் சரிகைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன? சூரத்தில் உற்பத்தி செய்கின்ற சரிகை போன்று உற்பத்தி செய்வதற்கு கிளைமாடிக் கண்டிஷன்ஸ் தேவைப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சரிகைத் தொழிற்சாலை நம் மாநிலத்தில் கிடையாது. எல்லாம் சூரத்திலிருந்துதான் வருகிறது.

திரு. து.ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, முன்பு ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்த மாநிலத்தில் ஒரு சரிகைத் தொழிற்சாலை ஆரம்பிக்க உத்தேசம் இருப்பதாகச் சொன்னார்கள். அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பரிசீலனை செய்யப்பட்டு கைவிடப்பட்டது.

திரு. ஜே. மாதா கவுடர் : அப்படிக் கைவிடப்பட்டதன் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நமது தேவைக்கு மலிவாக வெளி ராஜ்யங்களிலிருந்து கிடைக்கின்றது. அந்தச் சரிகைக்கு கனம் கூட அதிகமாக இல்லாததினால் போஸ்டிலேயே வந்துவிடுகிறது. அந்தக் காரணத்தினால் அது அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : தங்கக்கட்டுப்பாடு உத்திரவு நீடித்து இருக்கலாம் என்ற நிலை இருக்கிற காரணத்தினால் சரிகை சூரத்திலிருந்து வருவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகையால், நம்முடைய ராஜ்யத்திலே தொழிற்சாலைகள் புதிதாக ஆரம்பித்தால் வசதியாக இருக்கும் என்பதை அரசாங்கம் கவனிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படித் தொழிற்சாலை ஆரம்பிக்க தனியார் துறையில் யார் முன் வந்தாலும் அவர்களுக்கு சர்க்கார் உதவி செய்யும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சேலத்தில் சரிகை உற்பத்தி செய்யப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கு சரிகை உற்பத்தி செய்யப்படவில்லை.

Public sector industries

*339 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that in future new factories for producing sugar, cloth and cement will be started only in public sector; and

(*b*) if so, the reasons therefor?

[8th November 1965

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) This matter is under the consideration of the Government of India, but final decision has not been taken.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்தப் பெரிய தொழிற்சாலை ஆரம்பிக்கும் விஷயத்தில் மாநில அரசாங்கமே, அல்லது மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடமிருந்து 51 சத விகிதம் பங்குகளைப் பெற்றோ, ஆரம்பிக்கலாம். தனி நபருக்கு அப்படிக் கொடுக்கக் கூடாது என்று மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் யோசனை கூறியதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான யோசனை கூறவில்லை.

தர்மபுரி மாவட்டத்தில் சர்க்கரை ஆலை

* 340 கேள்வி.—**திரு. ம. கமலநாதன்** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் ஓர் கூட்டுறவு சர்க்கரை ஆலை துவங்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) அது எப்பொழுது துவங்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The Government have decided to establish a sugar mill in the co-operative sector at Timmanahalli, near Palacode in Dharmapuri district and have applied to the Government of India for the grant of an industrial licence. The licence is awaited.

திரு. ம. கமலநாதன் : கூட்டுறவு சர்க்கரை ஆலை தர்மபுரி மாவட்டத்தில் ஆரம்பிக்கவேண்டுமென்ற நோக்கிலே இதில் உள்ள கமிட்டி உறுப்பினர்களோ, அல்லது சீஃப் ப்ரமோட்டார்களோ தர்மபுரி வட்டத்தில் உள்ளவர்களாக இல்லை. ஆகையால், தர்மபுரியில் உள்ளவர்களை உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப் படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லைசென்ஸ் இன்னும் வரவில்லை. வந்த பிறகு யோசனை செய்யலாம்.

புலவர் கா. கோவிந்தன் : நமது மாநிலத்தில் எத்தனை சர்க்கரை ஆலைகள் ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வாய்ப்பு இருப்பது என்பது பிரச்சினை அல்ல. கிடைப்பதுதான் பிரச்சினை. ஏனென்றால், அகில இந்தியாவிலே எவ்வளவு சர்க்கரை உற்பத்தி செய்யவேண்டும், எந்தெந்த மாநிலத்திற்கு எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று மத்திய சர்க்கார் முடிவு செய்யவேண்டியிருக்கிறது. அந்த முடிவு தெரிந்த பிறகு நம்முடைய மாநிலத்திற்கு எவ்வளவு வரும் என்று தெரியும்.